# “எனக்குச் சமயமான போது” (24:24-27)

*சக பிரசங்கியார் ஒருவர், “தள்ளிப்போடுதல்” பற்றிய பிரசங்கத்தை, “இது மிகவும் தேவையான ஒரு கருத்து ஆகும் ... நான் இதைப் பிரசங்கிக்க வேண்டுமென்று பல மாதங்களாக விரும்பிக் கொண்டிருந்தேன் ... ஆனால் சில காரணங்களுக்காக இதை தள்ளிப் போட வேண்டியதாயிற்று!” என்று கூறியதன் மூலம் அறிமுகப்படுத்தி வைத்தார்!*

*நமது பணிகளை, விசேஷமாக நாம் மகிழ்வுடன் அனுபவிக்காத பணிகளைத் தள்ளி வைக்கும் குற்றத்தை நாம் யாவருமே செய்தவர்களாய் இருக்கின்றோம். மாணவர்கள் பருவத் தேர்வுகள் எழுதுவதைத் தள்ளி வைக்கின்றார்கள்; கணவர்கள் வீடுகளில் பழுது நீக்கும் பணிகளைச் செய்வதைத் தள்ளி வைக்கின்றார்கள்; அமெரிக்கர்கள் தங்களின் வருமான வரிக் கணக்குப் படிவங்களை நிரப்பி அனுப்புவதை ஏப்ரல் 15ம் தேதி வரை தள்ளி வைக்கின்றார்கள்.*

*நாம் தள்ளிப் போடுகின்ற பல வேலைகள் அற்பமானவைகளாய் இருக்கையில், நாம் தள்ளிப் போடுகின்ற சில பணிகள் மற்றும் முடிவுகள் மிக முக்கியமானவைகளாய் இருக்கின்றன. யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்.*

*நாளைய தினத்தில் - அவர் அழிந்து போனவராயிருக்கப் போகின்றார்*
*நாளைய தினத்தில் - அவரிலும் அன்பானவர், வீரமானவர் எவரும் இரார்.*
*ஆனால் அவர் இறந்து, காட்சியில் இருந்து மறையும் பொழுது அவர் விட்டுச் செல்பவை யாவும்,*
*அவர் உயிருடன் இருந்த பொழுது நாளை செய்யலாம் என்று அவர் தள்ளி வைத்திருந்த செயல்களேயாகும்.[1]*

*கிறிஸ்தவராகுதல் என்பதைத் தள்ளிப் போடுதல் என்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். சாத்தான் தனது பிசாசு களுடன் ஒரு மாநாடு நடத்தியதாகக் கதையொன்று கூறப் படுகின்றது. கிறிஸ்தவர்களாகுபவர்களின் எண்ணிக்கை பற்றிய தனது கவலையைத் தெரிவித்த அவன் அச்செயல்பாட்டை எப்படி தாமதப்படுத்தலாம் என்பதற்கு ஆலோசனை கேட்டான். ஒரு பிசாசு, "நாம் மக்களிடம், பரலோகம் என்று ஒன்றும் இல்லை, எனவே அவர்கள் கிறிஸ்தவர்களாகத் தேவையில்லை என்று கூற முடியும்" என்றது. சாத்தான் அதற்கு, "இல்லை, அது வேலைக்கு உதவாது. தேவனை நம்புகின்ற எல்லாருமே இந்த வாழ்வுக்கு அப்பால் தேவனோடு கூட - இருக்கக் கூடிய இடம் ஒன்று இருப்பதை அறிவார்களே" என்றான். இன்னொரு பிசாசு: "நாம் மக்களிடம், நரகம் என்று ஒன்றும் இல்லை, எனவே அவர்கள் கிறிஸ்தவர்களாவது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று கூற முடியும்" என்றது. சாத்தான் அதற்கு, "அதுவும் வேலைக்கு உதவாது. உலகத்தில் உள்ள அநீதியைப் பார்க்கும் எவரும், எல்லாம் சரியாக்கப்படக் கூடிய வேளையொன்று இருக்கிறது என்பதை அறிவார்களே" என்றான். கடைசியில் ஒரு பிசாசு, "நாம் மக்களிடம், அவர்கள் கிறிஸ்தவர்களாக வேண்டும், பரலோகமும் பாதாளமும் உண்டு - ஆனால் அதற்கு அவசரம் ஒன்றுமில்லை என்று கூற முடியும்" என்ற ஆலோசனையைத் தந்தது. சாத்தான் சிரித்துக் கொண்டே "அற்புதமான யோசனை! நாம் பிரசங்கிக்கக் கூடிய வேறு எந்தச் செய்தியைக் காட்டிலும், இந்தச் செய்தியானது அதிகமானவர்களை இழந்து போகச் செய்யும்!" என்று கூறினான். இந்தக் கதை கற்பனையானதே, ஆனால் இதன் செய்தி கற்பனையானதல்ல: "அவசரம் ஒன்றுமில்லை" என்ற செய்தியானது பல ஆயிரக்கணக்கானோரை ஆயத்தமின்றியே தேவனை எதிர்கொள்ளும்படி அனுப்பியுள்ளது.*

*தள்ளிப்போடுதல் பற்றி நடபடிகள் புத்தகத்தில் காணப் படும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டை மையமாகக் கொண்டு இப்பாடம் அமைக்கப்பட்டுள்ளது: அதாவது அதிகாரம் 24ல் தேசாதிபதி பேலிக்ஸின் மனமாற்றமின்மையென்பதே இப்பாடமாகும். அந்த அதிகாரத்தை நான் படிக்கையில், முதல் பாகத்தில் பவுல் பேலிக்ஸ் முன்பாக நின்றது மற்றும் கடைசி பாகத்தில் பேலிக்ஸ் பவுலின் முன்பாக நின்றது ஆகியவற்றிற்*

*கிடையே இருந்த ஒற்றுமைகள் குறித்து அதிர்ந்தேன். பவுல் ஒரு நாளின் ஒரு பகுதி மட்டுமே விசாரணையில் இருந்தார்; பேலிக்ஸோ இரண்டாண்டு காலம் விசாரணையில் இருந்தார்.*

## *விசாரணையில் இருவர் (24:24)*

*"[பவுல் பாதுகாப்புச் சிறைக்குள் திரும்பிய பிறகு] சில நாளுக்குப் பின்பு பேலிக்ஸ் யூதஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனே கூட வந்து" (வ. 24அ). தேசாதிபதி என்ற அவரது கடமைகளில் ஒரு பகுதியாக அவர் (பேலிக்ஸ்) - தமது பகுதியைப் பற்றிய ஆய்வு செய்யும் பயணங்கள், மற்ற அதிகாரிகளை மரியாதையினிமித்தம் சந்தித்தல், மற்றும் இது போன்ற - பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட ஒரு பயணத்திலிருந்து திரும்பும் பொழுது, தேசாதிபதியும் அவரது மனைவியும் செசரியாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.*

*இன்னும் நாம் அதிகமாய்ச் செல்லுமுன்னர், புகழ் மிக்க இத்தம்பதிகளைப் பற்றிய வாழ்க்கைச் சுருக்கத்தைக் காண்பது முறையானதாகும். கிலவுதியுவின் தாயாகிய அந்தோனியோ வின் வீட்டில் பேலிக்ஸ் ஒரு அடிமையாகப் பிறந்திருந்தார். அந்தோனியோ, பேலிக்ஸ் மீதும் அவரது சகோதரரான பல்லாஸ் மீதும் ஆழ்ந்த பாசம் வைத்து அவர்களை விடுதலை செய்து விட்டார். பல்லாஸ், கிலவுதியுவுக்கு மிகவும் பிரியமான வராகி, கிலவுதியு பேரரசரான பிறகு, இராஜ்யத்தில் அதிக செல்வாக்கைச் செலுத்தினார். பல்லாஸின் செல்வாக்கின் மூலமாகவே பேலிக்ஸுக்கு முதலில் சமாரியாவில் அதிகாரம் செலுத்தும் இடம் ஒன்றும் பிறகு யூதேயாவின் அதிகாரியாகும் வாய்ப்பும் தரப்பட்டது. அடிமை நிலையிலிருந்து இப்படிப் பட்ட பதவிக்கு உயர்த்தப்பட்ட முதல் நபர் பேலிக்ஸ் ஆவார் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.*

*பேலிக்ஸ் பதவியைப் பெற்றிருந்தாலும், ஆளக்கூடிய இயற்கைப் பண்புகள் அவரிடத்தில் இல்லை. ரோமர்களின் வரலாற்றாளர்களில் ஒருவரான டேசிட்டஸ் என்பவர், "ஒவ்வொரு வகைப்பட்ட கொடூரம் மற்றும் காமவுணர்வு ஆகியவற்றுடன் [பேலிக்ஸ்] அரசனுக்குரிய அதிகாரத்தை அடிமையின் உணர்வுடன் செயல்படுத்தினார்"[2] என்று கூறி*

னார். ஒரு எழுத்தாளர் இந்தச் தேசாதிபதியை கொடூரமான, ஊழல் மிகுந்த, பொருளாசையுள்ள, இணங்கக் கூடியவர்[3] என்று கூறியுள்ளார். யூதேயாவில் பெரிதும் சமாதானமற்ற காலத்தில் இவர் தேசாதிபதியாய் இருந்தார். மதிநுட்பமும் இராஜ தந்திரமும் உள்ள ஒரு மனிதராய் அவர் அந்தச் சூழ்நிலையை மாற்றியிருக்க வேண்டும், ஆனால் பேலிக்ஸிடம் இவ்விரு குணங்களில் எதுவும் இருந்ததில்லை. அவருடைய காட்டு மிரண்டித்தனமான ஆளுகை முறையே அதன்பின் பத்தாண்டுக்கும் சற்றுக்குறைவான காலமளவும் யூதேயாவில் எழுந்த கலகங்களுக்கும் - எருசலேம் அக்கலகத்தினால் முற்றாக அழிவதற்கும் - காரணியாயிற்றென்று வரலாற்றாளர்கள் கூறுகின்றார்கள்.

தேசாதிபதியின் அருகில் அமர்ந்திருந்த பெண்ணும் கூட, சுயமைய நோக்கத்திலும், கட்டுக்கடங்காத காம வெறியிலும் அவருக்குச் சரி நிகரான இணையாகவே விளங்கினாள். அவள் புகழ்ச்சியற்ற ஏரோது குடும்பத்தின் ஒரு உறுப்பினராய் இருந்தாள்.[4] அவளுடைய தகப்பனார் அப்போஸ்தலரான யாக்கோபுவைக் கொலை செய்திருந்தார் (12:1, 2). அவளுடைய பெரிய சிற்றப்பா யோவான் ஸ்நானனைக் கொலை செய்தும் (மத். 14:1-12) மற்றும் இயேசுவை ஏளனம் செய்துமிருந்தார் (லூக். 23:6-12). அவளுடைய தாத்தாவின் தகப்பனார் குழந்தையாயிருந்த இயேசுவைக் கொலை செய்ய முயற்சி செய்திருந்தார் (மத். 2). துருசில்லாளின் பாட்டியினுடைய தாயாகிய மரியம்[5] என்ற பெண்மணி புகழ் பெற்ற யூதக் குடும்பம் ஒன்றிலிருந்து வந்ததால் துருசில்லாள் “யூதஸ்திரீ” என்று அழைக்கப்பட்டாள். துருசில்லாளுக்கு இரண்டாம் ஏரோது அகிரிப்பா என்ற சகோதரனும், பெர்னீக்கேயாள் என்ற சகோதரியும் இருந்தார்கள், இவர்களை நாம் அதிகாரம் 25ல் சந்திப்போம்.

துருசில்லாளின் புலன் கவரும் அழகைப் புகழ்வதில் வரலாற்றாளர்கள் ஒரே கருத்துடையவர்களாய் இருக்கின்றார்கள். குளோவிஸ் சேப்பல் என்பவர், அவள் “வெளிப்புறத்தில் அழகுடையவளாயும் உட்புறத்தில் அழுகியவளாயும் இருந்தாள்” என்று கூறினார். துருசில்லாள் அந்தத் தேசாதிபதியின் மூன்றாவது மனைவியாய் இருந்தாள்.[6] அவளுக்குப் பதினாறு வயதாய் இருக்கும்பொழுது அவளுடைய கணவரிடம் இருந்த

அவளை பேலிக்ஸ் தவறிழைக்கச் செய்தார். துருசில்லாளுக்கு அப்பொழுது இருபது வயது கூட ஆகியிருந்ததில்லை, ஆனால் உலகத்தின் வழிகளில் அவள் தேறினவளாய் இருந்தாள்.

நாம் படிக்கும் வரலாறு நடந்த காலத்தில், பேலிக்ஸும் துருசில்லாளும் செசரியாவுக்குத் திரும்பி வந்திருந்தார்கள். பவுல் வந்திருந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட அவர்கள் - விசேஷமாக துருசில்லாள் - அவரைக் காணவும் அவர் பேசுவதைக் கேட்கவும் ஆர்வமாய் இருந்தார்கள். மேற்கத்திய வசனத்தில் இவ்விடத்தில், துருசில்லாள் "பவுலைக் காணவும், அவர் பேசுவதைக் கேட்கவும் விரும்பியதால், அவளைத் திருப்திப்படுத்த விரும்பி [பேலிக்ஸ்] பவுலை அழைப்பித்தார்" என்ற கூடுதல் விபரம் சேர்க்கப்பட்டுள்ளது. துருசில்லாள் பவுல் பேசுவதைக் கேட்க விரும்பியது ஏன்? அந்த சலிப்பான மாலை வேளையில் பொழுதுபோக்க அவள் விரும்பினாளா, அல்லது மார்க்கத்தைப் பற்றிக் கற்றுக் கொள் வதில் அவள் உண்மையான விருப்பம் கொண்டிருந்தாளா? அவளது ஆர்வம் உண்மையானதென்று நாம் நம்புவோம்.

காரணம் எதுவாயிருப்பினும், பேலிக்ஸ் "பவுலை அழைப் பித்தார்" (24:24ஆ). C.C. கிராஃபோர்டு அவர்கள் அக்காட்சி யைப் பின்வருமாறு சித்தரித்தார்:

> கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைப் பற்றி அதிகமாய்ப் பவுல் கூறும்படி கேட்பதற்கு காவலறையில் இருந்து அவரைக் கொண்டு வர பேலிக்ஸ் கட்டளையிடுகின்றார் ... சலவைப் படிக்கட்டுகளின் வழியே சங்கிலிகள் சலக் சலக் என்று ஒலிக்க, பவுல் அவர்கள் முன்னிலையில் நடந்து வருகின்றார், அவரது ஆடைகளில் இருந்து சிறையின் துர்நாற்றம் வெளிப்படுகின்றது, அவர் ஏறக்குறைய அறுபது வயதுள்ள சிறு மனிதராயிருந்தும், எண்பது வயதுள்ளவர்போலக் காணப்படுகின்றார். அவர் தேசாதிபதியையும், அருகில் இருந்த பெண்மணியையும் பார்த்து மரியாதையுடன் வணக்கம் செலுத்துகின்றார். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, விசுவாசத்தின் முதற் கொள்கைகளை அவர்களுக்கு விவரிக்கத் தொடங்குகின்றார்.

## குற்றச்சாட்டுகள் (24:24, 25)

*பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் ஆகியோர் முன்பாகப் பவுல் நின்றபொழுது, பின்வரக் கூடிய தலைப்புகள் பலவற்றைப் பற்றி மனதில் பதியக்கூடிய வகையில் உரையாடல் செய்து அவர்களை வசீகரித்திருக்க முடியும்: கிரேக்க தத்துவம், பழங்காலப் புராணம், தமது பயணங்களில் அவர் கண்டிருந்த அதிசயங்கள் போன்றவை. இருப்பினும், பவுல் அவர்களுடைய பாராட்டுக்களை அல்ல ஆனால் அவர்களுடைய ஆத்துமாக் களை ஆதாயம் செய்வதிலேயே ஆர்வமாய் இருந்தார்.[7] அவர் "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை" ப் பற்றி அவர்களிடத்தில் பேசினார் (வ. 24இ). துருசில்லாள் யூதப் பின்னணியைக் கொண்டிருந்ததால், பவுல் அநேகமாகப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் தொடங்கி, அவைகள் இயேசுவின் வாழ்வில் நிறைவேறியதை விளக்கியிருந்திருப்பார் (17:2, 3ஐக் காணவும்). அவர் இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த் தெழுதல் பற்றியும், இரட்சிப்புக்கு அவரில் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் நிச்சயமாகக் கூறியிருந் திருப்பார் (4:12; 2:37, 38).*

*பிறகு பவுலின் உரையாடலில் எதிர்பாராத ஒரு திருப்பம் ஏற்பட்டது. இயேசுவின் மீதுள்ள விசுவாசமானது ஒழுக்க ரீதியான மறைவான அர்த்தங்களும் மற்றும் ஒழுக்க ரீதியான வாழ்வு அவசியம் என்பதையும் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டிய போது, அவரது கருத்து தனிப்பட்ட வகையில் அவர்களை வேதனைக்குள்ளாக்கியிருக்க வேண்டும். சில வேளைகளில் மக்கள், "பிரசங்கியாரே, நீங்கள் பிரசங்கிப்பதை நிறுத்தி விட்டு, தேவையின்றிக் குறுக்கிடத் தொடங்கி விட்டீர் கள்" என்று கூறுவதைக் கேட்டிருக்கின்றேன். விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நல்ல பிரசங்கம் என்பது குறுக்கிடு தலாகவே ஆகும்; நாம் வாழும் நிலைக்குப் பிரசங்கியார்கள் இறங்கி வந்து உணர்த்த வேண்டியதாய் இருக்கின்றது.*

*பவுலின் உரையானது பொருத்தமானதாகவும், கடிந்து கொள்வதாகவும், கடுமை தணியாததாகவும், மற்றும் இடர்ப் பாடு உடையதாகவும் இருந்தது. அந்த அப்போஸ்தலரின் மூன்று கருத்துப் பிரசங்கப் புறக்குறிப்பை லூக்கா பதிவு*

செய்தார்: "அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில்" (வ. 25அ; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன). பேலிக்ஸின் முன்னிலையில் பவுல் விசாரிக்கப்பட்ட போது, அவருக்கெதிராக மூன்று குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டன (24:5, 6) - அவைகள் யாவும் பொய்யான குற்றச்சாட்டுகளாய் இருந்தன. இப்பொழுது உண்மையில், பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் ஆகியோருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டன - இவைகள் வேதனை தரக்கூடிய உண்மை யான குற்றச்சாட்டுகளாய் இருந்தன.

அநீதி மற்றும் தவறான செயல் ஆகியவற்றில் ஒன்று போலிருந்த அந்தத் தம்பதிகளுக்கு, பவுல் "நீதியைப்" பற்றிப் பேசினார்.[8] "நீதி" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, சரியானதைச் செய்தலைக் குறிப்பிட முடியும். சங்கீதக்காரர் கர்த்தரிடத்தில்: "உமது கற்பனைகளெல் லாம் நீதியுள்ளவைகள்" என்று கூறினார் (சங். 119:172அ). இயேசு, "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத். 3:15ஆ) என்றார். இந்த வார்த்தை தேவனுடைய பார்வையில் நேர்மையானவராய்க் கணக்கிடப் படுவதையும் குறிப்பிட முடியும் (பிலி. 3:9). ஆபிரகாமுடைய விசுவாசம் "அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (ரோமர் 4:3ஆ). நீதி என்பது "நியாயம்" என்ற கருத்தையும் கொண்டுள்ளது, அது சமானமான மற்றும் நல்லதாக உள்ளது - தேசாதிபதியும் அவரது மனைவியும் இப்பண்புகளுக்கு அந்நியர்களாய் இருந்தார்கள்.

எளிமையாகக் கூறுவதென்றால், பவுல் பாவத்தைப் பற்றி - குறிப்பாகப் பேலிக்ஸும் துருசில்லாளும் பாவிகள் என்றும், அவர்களுக்குத் தேவனுடைய கிருபை தேவையென்றும் - பிரசங்கித்தார்! பரிசுத்த ஆவியானவர் "பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், ... உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" (யோவா. 16:8) என்று இயேசு கூறினார். இன்றைய நாட்களில் உலகின் தேவை பெருகியுள்ளது, ஏனென்றால் அது பாவத்தைப் பற்றிய உணர்வையே இழந்து நிற்கின்றது. புகழ் பெற்ற எழுத்தாளரும் கவிஞருமான பில்லிஸ் மெக்கின்லி அவர்கள், "மக்கள் இப்பொழுது பாவம் நிறைந்தவர்களாய் இருப்ப

தில்லை. அவர்கள் பக்குமற்றவர்களாகவோ அல்லது நல்ல வாய்ப்புக்குக் கீழானவர்களாகவோ அல்லது பயமுறுத்தப் பட்டவர்களாகவோ அல்லது மிகவும் குறிப்பாக, வியாதிப் பட்டவர்களாகவோ மட்டுமே இருக்கின்றார்கள்".[9] உலகம் விரும்புகின்றதோ இல்லையோ, பாவம் என்பது இன்னமும் இருக்கின்றது (ரோமர் 6:23)!

அமெரிக்க அதிபராய் இருந்த கால்வின் கூலிட்ஜ் அவர்கள் ஒருமுறை சபை ஆராதனை முடிந்து திரும்புகையில், பிரசங்கி யாரின் தலைப்பு பற்றி அவரிடத்தில் கேட்கப்பட்டது. அதிகம் பேசுபவரென்று அறியப்பட்டிராத அந்த அதிபர் "பாவம்" என்று பதில் கொடுத்தார். விசாரித்தவர் விடாது தொடர்ந்தார்: "அதைப் பற்றி அவர் என்ன கூறினார்?" கூலிட்ஜ் அவர்கள், ''அவர் அதற்கு எதிரானவராக இருந்தார்'' என்று பதில் கொடுத்தார். ஒரு பிரசங்கியார் பாவத்திற்கு "எதிராக" மட்டும் இருக்கும் வரையிலும் அவரது பிரசங்கத்தைப் பலர் மறுப்ப தில்லை. இருப்பினும் பவுல், வசதியற்ற விதத்தில் தனிப்பட்ட வாழ்வில் குறுக்கிட்டார். இச்சை நிறைந்த வாழ்வில் ஈடுபட்டிருந்த அவ்விருவரிடத்திலும் பவுல் "இச்சையடக்கம்" பற்றிப் பேசினார்.

இச்சையடக்கம் பற்றிக் கூறுவதற்கு வேதாகமத்தில் ஏராள மானவை உண்டு. இச்சையடக்கம் என்பது ஆவியின் கனிகளில் ஒன்று ஆகும். (கலா. 5:23) - அது கிறிஸ்தவ கிருபைகளில் ஒன்று ஆகும் (2 பேது. 1:6).[10] "இச்சையடக்கம்" என்பதற்கான ஆங்கில வார்த்தையும் (self-control) இவ்விதமாய் மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையும் ஆகிய இரண்டுமே சுய ஒழுக்கத்தை, ஒருவரின் விருப்பங்களை அடக்குகின்ற உள்ளான பலத்தை,[11] "மாம்சத்தையும் அதின் ஆசை இச்சை களையும்'' சிலுவையில் அறையக் கூடிய பலத்தை (கலா. 5:24ஆ) குறிப்பிடுகின்றன. இச்சையடக்கம் உள்ளவர் தவறான வைகளில் இருந்து விலகியிருக்கின்றார்.[12]

பவுலின் நாட்களில் இவ்வார்த்தையானது, "ஒருவர் தம் ஒழுக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயிற்சி செய்து, தமது கற்பைக் காத்துக் கொள்வதைக் குறிப்பதாகவும்"[13] இருந்தது (எடுத்துக் காட்டிற்கு 1 கொரி. 7:9ஐக் காணவும்). ஐயத்திற்கிடமின்றி, பாலியல் பாவத்தில் வெட்க உணர்வின்றி வாழ்ந்து கொண்டி ருந்த தம்பதிகளுக்கு இது அபாயமானதொரு செய்தியாக

*இருந்தது (1 கொரி. 9:10). இதே போன்ற செய்தியொன்றைத் துருசில்லாளின் பெரிய சிற்றப்பாவுக்கு யோவான்ஸ்நானன் போதித்த பொழுது, யோவான் தமது தலையை இழந்தார் (மத். 14:4, 10)! இருப்பினும், இது பேலிக்ஸுைம் துருசில்லாளும் கேட்கத் தேவையானதொரு செய்தியாய் இருந்தது - பவுல் அதைப் பிரசங்கிக்கத் தயங்கவில்லை!*

*இன்றைய நாட்களில் நமது சமுதாயத்தில் உயர்ந்த பட்சமாய் வளர்ந்துள்ள பாலியல் பாவத்திற்கு எதிராகப் பிரசங்கிக்கக்கூடிய தைரியமுள்ள மனிதர்கள் நமக்குத் தேவை (2 தீமோ. 4:1-4ஐக் காணவும்). பல ஆயிரக்கணக்கான மக்கள் வேசித்தனம், விபசாரம் ஆகிய பாவங்களை அவைகளின் உடனடியான அல்லது நித்தியமான விளைவுகள் பற்றிய சிறிதளவு எண்ணத்துடனோ அல்லது அந்த எண்ணமின்றியோ செய்கின்றார்கள் (ரோமர் 13:9; 1 கொரி. 6:18-20; கலா. 5:19-21). "... விபசாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன் ..." (நீதி. 6:32அ) என்பது உண்மையாகவே இன்றும் நிலைத்துள்ளது!*

*விளக்கப்படுத்துவதற்கு மூன்றாவது சத்தியமொன்றைப் பவுல் கொண்டிருந்தார். ''ஒருவர் நேர்மையாக அல்லது இச்சையடக்கமாக வாழ்வதோ அல்லது வாழாமல் இருப்பதோ என்ன மாறுபாட்டை ஏற்படுத்தி விடுகின்றது?'' என்ற கேள்விக்கு அவர் பதில் கொடுக்க வேண்டியதாயிருந்தது. பேலிக்ஸுைம், துருசில்லாளும், "பவுலே, நீ தெய்வபக்தியுள்ள, இச்சையடக்கமான வாழ்க்கையை வாழ்ந்தாய், அது உன்னை எங்கு கொண்டு வந்திருக்கின்றது? நீ எங்களுக்கு முன்பாக விலங்குடன் மற்றும் சிறைச்சாலையின் மங்கிய உடையுடன் நிற்கின்றாய். ஆனால் நாங்கள் எங்களுக்குப் பிரியமானபடி வாழ்கின்றோம், இங்கு ராஜ உடையில் அரியணைகளில் அமர்ந்திருக்கின்றோம்!" என்று பவுலிடம் கூறியிருக்க முடியும். தேவன் இந்த வாழ்விலேயே எல்லாக் கணக்குகளையும் தீர்த்து விடுவதில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்வது தேவையா யிருந்தது. அந்த வேளைக்காக மட்டுமே வாழ்ந்திருந்த ஒரு ஜோடியினிடத்தில், பவுல் "இனி வரும் நியாயத்தீர்ப்பு" பற்றிப் பேசினார்.*

*பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் ஆகியோரின் அரியணை களுக்கு முன்பாகப் பவுல் நின்றிருந்தார், ஆனால் அவர்கள் ஒரு நாளிலே தங்களின் சுய இச்சைகள் மற்றும் மீறுதல்களுக்காகக்*

கணக்கொப்புவிக்க நித்திய அரியணையொன்றின் முன்பாக நிற்க வேண்டியதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார் (ரோமர் 14:12; 2 கொரி. 5:10; வெளி. 20:11-15). பவுல் இதை அத்தேனியர்களுக்கு அறிவித்திருந்தார்:

> இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் … (அப். 17:30ஆ, 31).

இன்றைய நாட்களில் பல பிரசங்க மேடைகளில், நியாயத் தீர்ப்பு என்பது தவிர்க்கப்பட்டதொரு தலைப்பாக இருக் கின்றது. இந்த வாழ்வுக்குப் பிறகு பிரகாசமுள்ள பரலோகத் திற்குரிய வரவேற்புக் குழுவொன்று எல்லாரையும் வாழ்த்தி வரவேற்கும் என்று நம்புவதற்கே மக்கள் விரும்புகின்றார்கள்.[14] ஆயினும், எபிரெயர் ஆசிரியர் வலியுறுத்துவதின்படி,

> அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு *நியாயத்தீர்ப் படைவதும்* [எல்லா] மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே (எபி. 9:27; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன).
>
> … நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களா யிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், *நியாயத்தீர்ப்பு* வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் (எபி. 10:26, 27).
>
> பழி வாங்குதல் எனக்குரியது, நானே பதிற் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் … ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே (எபி. 10:30, 31).[15]

## *பதில்செயல் (24:25)*

*பவுலின் விசாரணையின் பொழுது, குற்றச்சாட்டு களுக்கான அவரது பதில் பற்றி நாம் வியப்படையவில்லை: உடனடியாக அவர் தம்மைத் தற்காத்துக்கொள்ளத் தொடங் கினார். ஆனால் உண்மையில் பவுல் பேலிக்ஸ் மீதும் துருசில் லாள் மீதும் நீதியின்மை, சுய இச்சை மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய அவர்களின் மாறுபாடான எண்ணம் ஆகியவை பற்றி குற்றம் சாட்டிய போது, தேசாதிபதியின் பதில்செயலானது எதிர் பாராததாக, திகைக்கச் செய்யவும் கூடியதாக இருந்தது.*[16] *ஒரு கணம் அவர் ஊமையாகி, "நடுங்குவது" தவிர வேறெதுவும் செய்ய முடியாதவரானார் (வ. 25;* KJV*). "அவன் [பவுல்], நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து" (வ. 25அ, ஆ).* ASV*யில் "பேலிக்ஸ் பயமுறுத்தப்பட்டார்" என்றுள்ளது.*

*குளோவியஸ் சேப்பல் அவர்கள், தாம் அங்கிருந்து கொண்டு காட்சியைக் கவனித்ததாகக் கற்பனை செய்தார்:*

> *அவரை நான் கவனிக்கையில், அவர் தமது கை மூட்டிகள் வெளுத்துப் போகும் வரை, தமது விரல் நகங்கள் தமது உள்ளங் கைகளில் ஆழப்பதியும் வரை கைகளை அழுத்திப் பிசைந்து கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் வியர்வையின் பெருந்துளிகள் வழிந்தோடியதை நான் கண்டேன். கடுமையான குளிரில் அகப்பட்ட மனிதர் போல அவர் நடுங்கியதை நான் கண்டேன்.*

*பேலிக்ஸைப் பற்றி நாம் அறிந்துள்ள வகையில், அவர் தொடப்படும் மனச்சான்று உள்ளவராய் இருந்தார் என்று கற்பனை செய்வது கடினமாகும். தேவனுடைய வசனம் என்ற கண்ணாடியில் (யாக். 1:23-25) அவர் தம் சுய உருவத்தை - அத்துடன் நித்தியத்தின் கண நேரத் தோற்றத்தை - அவர் கண்டார், அவர் கண்டது அவருக்கு மரண பயத்தை ஏற்படுத்தியது.*

*துருசில்லாள் பயந்தாள் என்பதற்கோ அல்லது பவுலின் செய்தியினால் வேறு வகையில் தொடப்பட்டாள் என்பதற்கோ சுட்டிக்காட்டுதல் எதுவும் இல்லை. இந்த அழகு*

*மங்கை சுவிசேஷத்தில் எப்பொழுதாவது ஆர்வத்துடன் இருந்திருந்தால், அதை ஏற்றுக் கொள்வது என்பது அவளது வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படுத்தும் என்பதை அறிந்து, விரைவிலேயே ஆர்வமிழந்தாள்.*

## *விளைவு (24:25-27)*

*இது பேலிக்ஸுக்கு சத்தியத்தின் வாய்ப்பாக - ஒரு பொன்னான வாய்ப்பாக - இருந்தது. அந்த தேசாதிபதி வருத்தத்துடன், "சகோதரனே, நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறியிருந்தால் (அப். 2:37ஐக் காணவும்), அவரது வாழ்வும் - மற்றும் அவரது நித்தியமும் - எவ்விதமாய் மாறியிருந்திருக்கும்! அதற்குப் பதில் அவர், "பொறு!" என்று அலறினார். அவரது பயமானது, அவரைத் தீமையிலிருந்து நீதிக்குத் திருப்புவதற்குப் போதுமானதாய் இராதிருந்தும், அந்தப் பேட்டியை இடைவெட்ட அப்பயம் போதுமானதாயிருந்தது,[17] அவர், "இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது[18] உன்னை அழைப்பிப்பேன்"[19] (24:25இ) என்று கூறினார். பவுல் பேலிக்ஸின் முன்பு விசாரணையில் இருந்தபோது, தேசாதிபதி முடிவெடுப்பதைத் தள்ளிப் போட்டிருந்தார் (வ. 22); பேலிக்ஸ் கர்த்தருக்கு முன்பு விசாரணையில் இருந்த போது, அவர் (பேலிக்ஸ்) முடிவெடுப்பதை மறுபடியும் தள்ளிப் போட்டார். "அவர் தம்முடைய சொந்த வழக்கையே ஒத்தி வைத்தார்."[20]*

*அந்த நாளில் பேலிக்ஸ் முடிவெடுப்பதைத் தாமதப்படுத்தியதற்குக் "காரணங்கள்" கொண்டிருந்தார்: அது மிகவும் தாமதமான நேரமாய் இருந்தது; அவரும் துருசில்லாளும் பயணத்தினால் களைத்திருந்தார்கள்; அவரது சிந்தையில் மற்ற விஷயங்கள் இருந்தன (யூதர்கள் தொடர்ந்து கலகத்தின் விளிம்பிலேயே இருந்தார்கள்).[21] பவுல் கூறியதைக் கவனிக்கச் சிறந்த சமயம் "பிற்பாடு" வரும் என்று அவருக்குக் காணப்பட்டது ஏற்புடையதாயிருந்தது. இருப்பினும், தள்ளிப் போட்டதினால் பேலிக்ஸ் தமது வாழ்வுக் காலத்தில் ஒரு மாபெரும் சந்தர்ப்பத்தை இழந்து நின்றார் என்ற உண்மை அப்படியே நிலைநிற்கின்றது.*

KJV*யில்,* "When I have a *convenient* season, I will call for thee" *என்றுள்ளது.* NIV*யிலும் கூட,* "When I find it convenient, I will send

for you" என்றுதான் உள்ளது. பாவம் நிறைந்த வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு, இலாபந்தரும் ஒரு பதவியை விட்டு விடுவதற்கு, அழகான மனைவியைத் தள்ளி வைப்பதற்கு அவருக்கு "சமயம்" வாய்க்கவே இல்லை!

நாட்கள் சென்றபொழுது, பேலிக்ஸ் மறுபடியும் பவுலைச் சந்திக்க நேரம் கிடைத்தது: "அவன் அநேகந்தரம் அவனை அழைத்து, அவனுடனே பேசினான்" (வ. 26ஆ). இருப்பினும் அந்த ஆளுநர், "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து" கேட்பதற்காகப் பவுலை அழைப்பிக்கவில்லை (வ. 24ஈ). அதன் பின்பு அவர் எப்பொழுதாவது பவுலின் முன்னிலையில் பயந்தாரா என்பதை லூக்கா பதிவு செய்யவில்லை. "பேலிக்ஸ், பொருள் சார்ந்த, அதிகார வெறி மிகுந்த, பணத்தைப் பற்றும் தன்மை கொண்ட தமது இருதயத்தின் வெறுமையை நிரப்பக் கர்த்தரை அநுமதிக்கும் தமது வாய்ப்பை" தவற விட்டார்.[22] அவருடைய ஆவிக்குரிய "வாய்ப்பின் ஜன்னல்" அடைபட்டுப் போயிற்று.

நாகரீகப் பாங்கின் சிறு பிழம்பு கூட பேலிக்ஸிடம் அணைந்து போயிருந்தது. பவுலைச் சிறைப்படுத்தியிருந்த இரும்புக் கம்பிகளைப் போலவே பேலிக்ஸின் இருதயமும் கடினமடைந்திருந்தது (எபி. 4:7). ஆவிக்குரிய ஆர்வம் அனைத்தும் அகன்று போயிருந்தது.[23] "அவன் பவுலை விடுதலை பண்ணும்படி தனக்கு அவன் பணங் கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாய் ..."[24] இப்பொழுது தேசாதிபதி பவுலை அழைப்பித்துப் பேசினார் (அப். 24:26அ). பவுல் இயேசுவைப் பற்றிப் பேச முயற்சி செய்கையில், பேலிக்ஸ் அவரை இடை மறித்து, "ஆம், இது மிகவும் ஆர்வம் தரக்கூடிய விஷயம் தான், ஆனால் யூதருக்கு தர்மப்பணம் கொண்டு வந்ததாக நீர் முன்னால் கூறிய விஷயம் இதை விட அதிக ஆர்வம் தரக்கூடியதாகும்"[25] என்று கூறியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. பேலிக்ஸ் அவரை கிண்டலான பரிதாபத்துடன் பார்த்து: "பவுலே, உம்மை இந்நிலையில் காண்பதை நான் வெறுக்கின்றேன். நிதி ஆதாரமுள்ள நண்பர்கள் உமக்கு இருக்கின்றார்கள் என்பது சரிதானே? நான் ஒரு நியாயமான மனிதன். ஏற்பாடுகள் செய்யப்படலாம் ..." என்று கூறினார்.

KJV மற்றும் NKJVயில், கூடுதல் சொற்றொடருள்ள மாற்று வசனம் ஒன்று பிரதிபலிக்கப்படுகின்றது: "அவன் பவுலை

*விடுதலை பண்ணும்படி.” மூல வசனத்தில் இவ்வார்த்தைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், பேலிக்ஸ் விடுதலை என்ற எண்ணத்தைப் பவுலின் முன் ஊசலாட வைத்து, தனக்குத் தாராளமான இலஞ்சம் ஒன்றை எதிர்பார்த்தார்.[26] ரோமச் சட்டத்தின்படி, இலஞ்சம் பெறுதல் தடை செய்யப் பட்டிருந்தது, ஆனால் பேலிக்ஸ் போன்ற அதிகாரிகளுக்கு அது வாழ்க்கையின் உண்மையாக இருந்தது.*

*இலஞ்சத்தைப் பற்றிய வேதாகம உபதேசம் தெளிவாய் இருக்கின்றது,[27] அந்த உபதேசத்தின் வல்லமையுள்ள பயன் பாடாக இவ்வரலாறு விளங்குகின்றது. இலஞ்சம் கொடுப்பதை நியாயப்படுத்தும் சூழ்நிலை என்று ஒன்றிருக்குமென்றால், அது இந்தச் சூழ்நிலையாகத்தான் இருக்க வேண்டும். பவுல் விடுதலையாகி வந்து பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டு மென்று தேவன் நிச்சயமாகவே விரும்புவார் என்று பவுலின் நண்பர்கள் காரணங் காண்பித்து, ஒரு ஊழல் மிக்க அதிகாரியை ‘‘இந்த ஒருமுறை’’ மட்டும் விலை கொடுத்து வாங்குவது விரும்பத்தக்கதேயாகும் என்றும் முடிவு செய்திருக்கலாம். பணம் கொண்டிருந்த பல நண்பர்கள் பவுலுக்கு இருந்தார்கள்; ஆனால், தனிச்சிறப்புள்ள வகையில், இலஞ்சம் எதுவும் தரப்படவில்லை. “வழிமுறைகள்” தேவனுடைய வசனத்தை மீறும் பொழுது, “நிறைவான நோக்கமானது” ஒருபொழுதும் “வழி முறைகளை நியாயப்படுத்துவதில்லை”![28]*

*நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, இரண்டு ஆண்டுகள் கடந்து சென்றன (வ. 27அ).[29] பவுலுக்கும் பேலிக்ஸுக்கும் இடையில் வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன, ஆனால் பணம் எதுவும் பரிமாறப்பட வில்லை. இரண்டு ஆண்டுகள் முடிந்த போது, ‘‘பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ் யூதருக்குத் தயவு செய்ய மனதாய்ப் பவுலைக் காவலில் வைத்து விட்டுப் போனான்’’[30] (வ. 27ஆ). நீரோவினால் கி.பி. 59ல் பேலிக்ஸ் பதவியினின்று நீக்கப்பட்டு ரோமாபுரிக்கு வரும்படி கட்டளை பெற்றார்.[31] அவர் ஏன் நீக்கப்பட்டார் என்பதையும், அவர் ஏன் யூதருக்குத் தயவு செய்ய மனதாயிருந்தார் என்பதையும் வரலாறு தெளிவாக விளக்குகின்றது:*

செசரியா யூதர்களின் நகரமா அல்லது கிரேக்கர்களின் நகரமா என்பது பற்றிய வாதம் நெடுநாட்களாய் நீடித்திருந்தது, யூதர்களும் கிரேக்கர்களும் இதற்காக ஒருவரையொருவர் குத்திக் கிழித்தார்கள். யூதர்கள் வெற்றி பெற்றிருந்த ஒரு காலம் வெடித்தது. புறஜாதி யாருக்கு உதவும்படி பேலிக்ஸ் தமது துருப்புகளை அனுப்பினார். ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப் பட்டார்கள், பேலிக்ஸின் அனுமதியுடன் மற்றும் உற்சாகப்படுத்துதலுடன் அந்தத் துருப்புகள் நகரில் இருந்த பணக்கார யூதர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தார்கள்.

ரோம மாகாணங்களில் உள்ள எல்லாரும் பெற்றிருந்த உரிமைப்படியே யூதர்கள் செயல்பட்டார்கள் - தங்கள் தேசாதிபதியைப் பற்றி அவர்கள் ரோமாபுரிக்கு முறையீடு செய்தார்கள். அதனால்தான் பேலிக்ஸ், பவுல் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை உணர்ந்திருந்தும் அவரைச் சிறையிலேயே விட்டுச் சென்றார். அவர் யூதர்களின் ஆதரவைப் பெற விரும்பினார்.[32]

யூதர்களைச் சமாதானப்படுத்த பேலிக்ஸ் செய்த முயற்சி களைப் பற்றி வில்லியம் பார்க்ளே அவர்கள், “அது எந்த நோக்கத்திற்கும் பயன்படாது போயிற்று. அவர் தமது தேசாதி பதி பதவியிலிருந்து நீக்கப்பட்டு, தனது சகோதரன் பல்லாஸின் செல்வாக்கினால் மட்டுமே கொலைத் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தது”[33] பேலிக்ஸ் கால் நாட்டிற்கு (அதாவது பிரான்ஸ்) நாடு கடத்தப்பட்டு, அங்கே இறந்தார். துருசில்லாளும், அவர்களின் மகனும் பின்னாளில், வெசுவி யாஸ் என்ற எரிமலை வெடித்தபோது அதில் அகப்பட்டு அழிந்தார்கள். இவ்விதமாக உலகத்தை ஆதாயம் செய்ய முயற்சி செய்து அதனால் தங்கள் ஆத்துமாவை இழந்து போன ஒரு தம்பதியின் வாழ்வு வருத்தத்தில் முடிவடைந்தது (மத். 16:26) - பவுல் கர்த்தரைப் பற்றிப் பேசியதை அவர்கள் கேட்ட நன்னாளைப் பற்றி நினைக்கையில் இந்த வரலாற்றில் உள்ள வருத்தம் இருமடங்காகின்றது. “வாயிலிருந்தோ அல்லது பேனாவிலிருந்தோ வருகின்ற வருத்தம் தரும் வார்த்தைகள் எல்லாவற்றிலும் ‘அப்படிச் செய்திருக்கலாம்!’ ” என்பதே மிகவும் வருத்தம் தரும் வார்த்தைகள் ஆகும்![34]

# முடிவுரை

அப். 24 பற்றிய நமது பாடத்தில், விசாரணையில் இருந்த மூவரை நாம் கண்டோம்: பவுல், பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள். இதை நாம் முடிக்கும் முன்பு, வாழ்க்கைக்கான விசாரணைக்குட்படுத்தப்பட்ட நான்காவது நபரைப் பற்றி நாம் கவனிக்க விரும்புகின்றோம்: அது நீங்கள் தான்! இன்றைய நாளில் நீங்கள் பரிசுத்தமான தேவனுடைய அரியணைக்கு முன்பாகக் குற்றம் சாட்டப்பட்டு நிற்கின்றீர்கள். நீங்கள் ஒரு பாவியென்று குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றீர்கள். உங்களுக்கு முன்பாகத் திறந்த நிலையில் உள்ள ஒரே வாய்ப்பு “குற்றம்” என்பதேயாகும் (ரோமர் 3:23). நாம் யாவருமே ஆவிக்குரிய முறையில் அசுத்தமானவர்கள், “எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தையைப் போல இருக்கிறது” (ஏசா. 64:6ஆ).

தேவன் உங்களை மன்னிக்கின்றாரா இல்லையா என்பது அவருடைய வசனத்திற்கு உங்களுடைய பதில்செயலைப் பொறுத்ததாகும். சிலர் துருசில்லாளைப் போல - அஜாக்கிரதையாய், தேவனுடைய கிருபையைப் புறக்கணித்தல் என்ற - பதில் செயல் செய்கின்றார்கள். இன்னும் பலர் பேலிக்ஸைப் போலப் பதில்செயல் செய்கின்றார்கள். உங்கள் சொந்த ஆத்துமாவிற்குள்ளாகப் பாருங்கள்: “வரப் போகிற நியாயத்தீர்ப்பு” பற்றி எண்ணுகையில் உங்கள் இருதயம் வேகமாய்த் துடிக்கின்றதா? கர்த்தருடைய மறுவருகையைப் பற்றி ஆலோசிக்கையில் உங்கள் நெஞ்சில் மகிழ்ச்சி நிறையாது, பயம் குடி கொள்ளுகின்றதா? நீங்கள் பேலிக்ஸைப் போல நடுக்கமடைந்தும், உங்கள் வாழ்க்கையில் இலக்குகளை மாற்றத் திட்டமிடாதிருக்கின்றீர்களா? பேலிக்ஸின் பரிதாபமான வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள்: தேவனுடைய கிருபைக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள் - அதை இப்பொழுதே செய்யுங்கள்!

எட்வர்டு யங் அவர்கள், “தள்ளிப் போடுதல் என்பது காலத்தைக் களவாடுகின்றது”[35] என்று கூறினார். அது ஆத்துமாக்களையும் களவாடுகின்றது. பழைய ஆங்கிலப் பழமொழி ஒன்று “இந்த நாட்களில் ஒன்று எந்த நாளாகவும் இருப்பதில்லை” என்று கூறுகின்றது. பிரசங்கியாரான நண்பர் ஜெஃ டெய்லர் சமீபத்தில், “ஏதாவது ஒரு நாள் என்பது நாட்காட்டியில்

இல்லை” என்று விளக்கமளித்தார். வேதாகமம் பின்வருமாறு அறிவிக்கின்றது:

> நாளைய தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே (நீதி. 27:1).[36]
>
> அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவி கொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரி. 6:2).
>
> இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் (எபி. 4:7அ).

“ஒரு நாள் என்பது நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிவதற்கு உங்களின் கடைசி நாளாயிருக்கும்” என்று யாரோ ஒருவர் கூறினார். இதுவே அந்த நாளாய் இருக்கலாம். நீங்கள் கர்த்தரிடத்தில் வரத் தேவையானால், இப்பொழுதே அதைச் செய்யுங்கள்!


## காட்சி-உதவிக் குறிப்புகள்

வகுப்பு ஒன்றின் ஆர்வத்தைக் கவருவதற்கு நீங்கள் தொடக்கத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரு வழி முறை இதோ: கரும்பலகையின் மேற்பகுதியில், “உலகத்திலேயே மிகக் கனமான எடையுள்ளது” என்று எழுதுங்கள். அதன் கீழே, யானையின் உருவம், எடை தூக்குபவர்கள் பயன்படுத்தும் எடைக் கற்கள், மற்றும் சில எடையுள்ள பொருட்களை வரையுங்கள். வகுப்பில் இருப்பவர்களிடத்தில் “உலகத்தி லேயே அதிக எடையுள்ளதாக” நீங்கள் நினைப்பது எது என்று கேளுங்கள். பிறகு "Weight" என்ற வார்த்தையை "Wait" என்று மாற்றி, மிகக் கனமான காத்திருத்தல் (Wait) என்பது கீழ்ப்படியக் காத்திருத்தல்தான் என்று குறிப்பிடுங்கள்.

பேலிக்ஸைப் பற்றிப் பிரசங்கிக்கும் வேளையில், நான் கரும்பலகையில் எளிய சித்திரம் ஒன்றுடன் எளிய புறக்குறிப் பையும் வரைந்து காட்டுவதுண்டு: (1) தேவ பக்தியில்லாத கேட் பவர் ஒருவர், (2) பயமில்லாத பிரசங்கியார் ஒருவர்,

*(3) ஆராயும் பிரசங்கம் ஒன்று மற்றும் (4) ஏமாற்றமளிக்கும் விளைவுகள். ''கேட்பவர்'' பற்றிப் பேசுகையில் நான் கரும்பலகையில் பேலிக்ஸ் மற்றும் துருசில்லாள் ஆகியோரைச் சித்திரமாக வரைவதுண்டு. ''பிரசங்கியார்'' பற்றி விவாதிக் கையில் நான் விலங்கிடப்பட்ட பவுலை வரைவதுண்டு. "பிரசங்கம்" என்ற கருத்துக்கு வருகையில் நான் பவுலின் மூன்று கருத்துக்களை அட்டவணைப்படுத்துவதுண்டு. கடைசியாக, "விளைவுகள்" என்பதை "பயமடைந்தார், ஆனால் காத்திருந் தார்'' (அல்லது ''நடுநடுங்கி, 'வசதியான சமயத்திற்காக' காத்திருந்தார்'') என்ற வார்த்தைகளை எழுதி முக்கியப் படுத்துவதுண்டு.*

## பிரசங்கக் குறிப்புகள்



*பிரசங்கம்:*
*நீதி*
*இச்சையடக்கம்*
*இனிவரும் நியாயத் தீர்ப்பு*

*"பயமடைந்தார், ஆனால் காத்திருந்தார்"*

*"அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" இதழில், நடபடிகளில் மனமாற்றம் என்ற தலைப்பில் பதிமூன்று தொடர்ப் பிரசங்கங்களின் கருத்துத் தரப்பட்டிருந்தது. பேலிக்ஸின் மனமாற்றமில்லாமை என்பது அப்பாடங்களில் ஒன்று ஆகும். நீங்கள் படித்துள்ள மனமாற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றை மறுகண்ணோட்டமிட்டுப் பிறகு பின்வருமாறு தொடக்கத்தில் குறிப்பிட நீங்கள் விரும்பலாம்: "ஒவ்வொரு வரும் ஏற்றுக் கொள்பவர்களாய் இருப்பதில்லை யென்பதால், மனமாற்றமில்லாத நிகழ்ச்சிகள் சில இல்லாதிருந்தால் நாம்*

*வியப்படைவோம், மனித இயல்பின் இருப்பு அப்படியாக உள்ளது. இன்றைய நாளில் நாம் மனமாற்ற மில்லாமைக்கான சிறந்த நிகழ்ச்சி ஒன்றைப் படிப்போம்.” இந்தப் பிரசங்கங்களை நீங்கள் தனிப்பட்ட தொடர்களாகப் பிரசங்கித்தால், பவுலின் விசாரணை பற்றி இணைவைத் தரும் குறிப்புகளை இப்பாடத் திலிருந்து நீக்கி விடுங்கள். நீங்கள் பயன்படுத்தும் மொழி பெயர்ப்புக்குத் தக்காற் போன்று தலைப்பை மாற்றி உறுதிப் படுத்தவும் நீங்கள் விரும்பக்கூடும்.*

*வில்லியம் ஸ்மிட்டி அவர்கள், ‘‘பாவிகளுக்கான முன் மாதிரி, பேலிக்ஸ்” என்ற தலைப்புள்ள ஒரு பிரசங்கத்திற்குப் பின்வரும் கருத்துக்களை ஆலோசனையாகத் தந்துள்ளார்: (1) சில பாவிகளைப் போல, பேலிக்ஸஂம் சத்தியத்தைப் பற்றி “முழு நிறைவான அறிவுடையவராய்” இருந்தார். (2) எல்லாப் பாவிகளையும் போல, பேலிக்ஸஂம் தீர்மானம் செய்வதன் குறுக்குச் சாலைக்கு வந்தார். (3) பல பாவிகளைப் போல, பேலிக்ஸஂம் தேவனுடைய செய்தியாளர் மற்றும் செய்தி யிடமிருந்து புறம்பே திரும்பினார். (4) திரளான பாவிகளின் கூட்டத்தாரைப் போல, தேவனுடைய வசனத்தைக் கேட்டு விசுவாசிப்பதற்கு பேலிக்ஸ் மறுபடியும் ‘‘ஒரு வசதியான சமயத்தை” ஒருக்காலும் காணாதிருந்தார்.* (William H. Smitty, *300 Sermon Outlines from the New Testament* [Nashville, Tenn.: Broadman Press, 1983], 46.)

---

*குறிப்புகள்*

[1]Quoted in Paul Rogers, “Three Responses at Athens,” *The Preacher’s Periodical* (May 1985), 5:20. [2]Quoted in J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol. 2 (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 239. [3]G. Campbell Morgan, *The Acts of the Apostles* (Grand Rapids, Mich.: Fleming H. Revell, 1988 ed.), 388. [4]*“அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3” இதழில் “ஏரோதின் குடும்பம்” என்ற வரைபடத்தையும் அதே இதழில் துருசில்லாள் பற்றிய குறிப்புகளையும் காணவும்.* [5]*மரியம் என்பவள் பெரிய ஏரோதின் மனைவிகளில் ஒருத்தியும், அரிஸ்தோபுலுவின் தாயுமாவாள், துருசில்லாள் இவள் வழியில் வந்தவளாவாள். “அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 3” இதழில் “ஏரோதின் குடும்பம்” என்ற வரைபடத்தையும் அதே இதழில் மரியம் மற்றும் அவளது வாரிசுகள் பற்றிய குறிப்புகளையும் காணவும்.* [6]*பேலிக்ஸின் திருமணங்கள் யாவுமே சமூக வாழ்வில் ஏற்றத்திற்குச் செல்லும் சாதனைகளாகவே இருந்தன; மூன்று மனைவிகளுமே அரச குடும்பத்தில் பிறந்தவர்களாய்*

*இருந்தார்கள். அவர்களில் ஒருத்தி அந்தோனி - கிளியோபாட்ராவின் பேத்தியாய் இருந்தாள். [7]பேலிக்ஸும் துருசில்லாளும் எவ்வளவு மோசமானவர்களாய் இருந்தாலும், அவர்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றே தேவன் விரும்பினார் (2 பேது. 3:9). அவர்கள் ''கடினமானவர்களாய்'' இருந்திருக்கலாம், ஆனால் இரட்சிப்பிற்கேற்ற கிறிஸ்துவைப் பற்றிய அறிவினிடத்திற்கு வந்த (மந்திரவாதி சீமோன், சிறைச்சாலை அதிகாரி, சவுல் முதலியவர்களைக் காட்டிலும்) "அதிக கடினமுடையவர்கள்'' அல்ல. [8]''நீதி'' என்பது பவுலுக்கு மிகவும் பிரியமான வார்த்தைகளில் ஒன்று ஆகும்; அவர் தம் நிருபங்களில் இவ்வார்த்தையை ஐம்பத்தியாறு முறைகள் பயன் படுத்தினார்.* [9]Quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 501. [10]*1 கொரிந்தியர் 9:25 மற்றும் தீத்து 1:8 ஆகியவற்றையும் காணவும்.*

[11]*"இச்சையடக்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "பலத்தி[லிருந்து] வெளியே" என்று அர்த்தப்படும் கூட்டு வார்த்தையாகும்.* [12]'' Self Control" *என்பதற்குப் பதில்* KJV*யில் ''* temperance" *என்றுள்ளது, இது இன்றைய நாட்களில் தவறிலிருந்து விலகியிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது.* [13]Simon J. Kistemaker, *New Testament Commentary: Exposition of the Acts of the Apostles* (Grand Rapids, Mich.: Baker Book House, 1990), 852. [14]*நமது நாட்களில் மிக அதிகமாய்ப் பதிப்பிடப்படுகின்ற "மரணத்திற்கருகாமையின் அனுபவங்கள்" என்பவை (யாவும் இல்லாவிட்டாலும் அவைகளில் பெரும்பான்மையானவை) மரணத்திற்கு அப்பால் மனிதர்கள் யாவரும் சந்தோஷமான, பரவசமான இருப்பை அடைவார்கள் என்ற உணர்வைத் தருபவைகளாயிருப்பதாகவே சந்தேகிக்கப் படுகின்றன. வேதாகமமோ, இதற்கு மாறான ஒன்றைப் போதிக்கின்றது (மத். 7:13, 14).* [15]*2 தெச. 1:1-9; 1 பேது. 4:17-19; 2 பேது. 2:9-14; 3:3-10 உள்ளிட்ட மற்ற வேத வசனப் பகுதிகளும் பயன்படுத்தப் படலாம்.* [16]*தேசாதிபதியிடமிருந்து, மாறுபாடு, திட்டுதல் அல்லது கோபத்தைக் கூட நாம் எதிர்பார்த்திருந்திருக்கலாம்.* [17]*''லௌகீக துக்கத்தின்'' (2 கொரி. 7:10) எடுத்துக்காட்டாக பேலிக்ஸ் பயன்படுத்தப்பட்டுள்ளார்.* [18]*உண்மையில் முக்கியமானதற்கு நாம் "நேரத்தைக் காண்பது" அல்லது நமக்குச் சமயம் வாய்ப்பது என்பது அரிது; மாறாக நாம் ''நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள'' வேண்டும்.* [19]*இதை அத்தேனியர்களின் பதில்செயலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் (17:32).* [20]Morgan, 388.

[21]*தள்ளிப்போடுதலுக்கு பேலிக்ஸ் மற்றும் உள்ளூரில் உள்ளவர்களால் கொடுக்கப்படும் மிகப் பொதுவான சாக்குப் போக்குகளின் இணைவை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும்.* [22]Ogilvie, 328. [23]*தள்ளிப் போடுதலின் அபாயங்களை வலியுறுத்த வேண்டும்: (1) இன்னொரு வாய்ப்புக் கிடைக்குமுன் அவர் இறந்து போகலாம்; (2) கர்த்தர் மறுபடியும் வந்து விடலாம்; (3) இருதயம் கடினப்பட்டு விடலாம். சுவிசேஷத்தின் அழைப்பை ஒருவர் புறக்கணிக்கும் ஒவ்வொரு வேளையிலும் அவரது இருதயம் சிறிது அதிகமாய்க் கடினமடைகின்றது.* [24]*வசனப்பகுதியில், "அதே வேளையில், அவன் தனக்குப் பணம் கொடுக்கப்படும் என்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்" என்றுள்ளது. "அதே வேளையில்" என்ற வார்த்தையானது ஆரம்பத்தில் பேலிக்ஸினிடத்தில் ஆர்வங்களில் முரண்பாடு இருந்ததைச் சுட்டிக் காட்டியதாக நான் எடுத்துக் கொள்கின்றேன். இருப்பினும், பேலிக்ஸ் சுவிசேஷத்தில் கொண்டிருந்த வினயமான ஆர்வமெதையும் அவரது பொருளாசையானது விழுங்கிப் போடுவதற்கு அதிகமான காலம் ஆகிவிடவில்லை.* [25]*அப். 24:17க்கான குறிப்புகளைக் காணவும்.* [26]*பேலிக்ஸ், இராஜ வம்சத்தைச் சேர்ந்த மனைவியைக் கொண்ட ஆளுநராகவும், அவரது சகோதரர் ரோமாபுரியில் இருந்த மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவராகவும் இருந்தனர்; சராசரியான இலஞ்சம் போதுமானதாயிருந்திராது.* [27]*யாத். 23:8; உபா. 16:19; 2 நாளா. 19:7; சங். 15:5, 27*

*ஆகியவற்றைக் காணவும். [28]இலஞ்சம் என்பது பல பகுதிகளில் வாழ்வின் வழிமுறையாய் இருக்கின்றது - ஏறக்குறைய அது ஒவ்வொரு வாங்குதல் அல்லது செயல்பாட்டின் மீதும் "கூடுதல் வரி" யாகவே இருக்கின்றது. இலஞ்சத்தைப் பற்றிய வேதாகமத்தின் உபதேசங்களுடன் பலர் அன்றாடம் வாழ்க்கையில் போராடு கின்றார்கள், இது எனது வாழ்க்கையில் நான் ஒருபோதும் செய்ய நேர்ந்ததாக இல்லை. இந்த முரண்பாடுகள் எல்லாவற்றையும் தீர்ப்பது எப்படி என்றும் எனக்குத் தெரியவில்லை; இப்படிப்பட்ட சுமையுடன் வாழ்பவர்களுக்காக நான் பரிதாபப் படவும், எனது ஜெபங்களை ஏறெடுக்கவுமே என்னால் முடியும். [29]பேலிக்ஸால் வாக்குறுதியளிக்கப்பட்ட இந்த இரண்டாவது அழைப்பித்தல் நடக்கவில்லை என்பது உறுதி (24:22). [30]பவுலை விடுதலை செய்வது என்பதே சட்டப்படி பேலிக்ஸ் செய்திருக்க வேண்டிய ஒரே நடவடிக்கையாக இருந்தது, எனவே மீண்டும் ஒருமுறை ஒன்றுமே செய்யாமலிருப்பதை - முடிவு வரை நிலையாயிருப்பதை அவர் தேர்ந்து கொண்டார். ஆவிக்குரிய வகையில் பேலிக்ஸே சிறைப்பட்டவராயிருந்தார், பவுலோ கிறிஸ்துவுக்குள் விடுதலையானவராய் இருந்தார். ஒரு வசன நடையில் ''துருசில்லாளினிமித்தம் காவலில் வைத்து விட்டுப் போனான்'' என்றும் காணப்படுகின்றது. ஒருவேளை துருசில்லாள், தன்னைக் கண்டித்த வார்த்தை கூறியவருக்கெதிராய் விரோதம் கொண்டிருந்த (மாற். 6:19) அவளது அத்தையாகிய ஏரோதியாளின் அடிச்சுவடுகளில் நடந்திருக்கலாம்.*

*[31]வசனம் 27, நடபடிகளின் நாள் வரிசையைக் கணக்கிடுவதற்குத் திறவுகோல் குறிப்பாக உள்ளது: பவுல் இரு ஆண்டுகளுக்கு முன்பு கி.பி. 57ல் எருசலேமில் கைது செய்யப்பட்டிருந்தார்; பெஸ்து தேசாதிபதியானவுடன் ஒரு குறுகிய காலத்தில் (கி.பி. 60?) அவர் ரோமாபுரிக்குப் பயணம் தொடங்கி, அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார் (28:30), எனவே இப்புத்தகத்தின் நிகழ்ச்சிகள் கி.பி. 62வுடன் நிறைவடைகின்றன.* [32]William Barclay, *The Acts of the Apostles,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 171. [33]*மேற்கூறியது.* [34]John Whittier, *Maud Muller,* 53. [35]John Bartlett, *The Shorter Bartlett's Familiar Quotations,* ed. Christopher Morley (New York: Permabooks, 1953), 438. [36]*லூக்கா 12:19-21; யாக்கோபு 4:13, 14ஐயும் காணவும்.*